1 7 MAR 1967
STATE LEGISLATURE, MADR

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 5th November 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

School building

* 421 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any accident of building collapse took place recently in an Elementary School in Kallommen Koil Street, Mackey's Garden, Madras, resulting in the collapse of the roof; and

(*b*) if so, the details thereof and the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) A statement[a] is laid on the table of the House.

திரு. வை. சங்கரன்: இந்த அறிக்கையின்படி பார்த்தால் பெற்றோர்களின் வற்புறுத்துதலுக்கு இணங்க இப்போதுள்ள கூரைக் கொட்டகைக்கு மாற்றப்பட்டது. மழை பெய்ததினால் இடிந்து விழுந்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. பெற்றோர்கள் வற்புறுத்தியது என்ன? காரணத்தினால் வற்புறுத்தினார்கள் என்று சொல்லமுடியுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அது இன்வெஸ்டிகேஷனில் இருக்கிறது. கேஸ் பதிவு செய்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குமேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகள்

*** 422 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்திலுள்ள ஜில்லா போர்டு ஹைஸ்கூல்களில் எத்தனை பில்டிங் மேட்சிங் கிராண்ட் கேட்டிருக்கின்றன?

(இ) அவைகளில் எவ்வளவு பள்ளிகளுக்கு மேற்படி கிராண்ட் கொடுக்கப்பட்டிருக்கிறது.?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) 70.

(இ) 56.

---

[a] Printed as Appendix I on page 402–403.

[5th November 1966

திரு. து. ப. அழகமுத்து: தலைவர் அவர்களே, பாக்கியுள்ள பள்ளிகளுக்கு எப்போது அந்த கிராண்ட் அளிக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பஞ்சாயத்து யூனியன்கள் பத்தாயிரம் ரூபாய் கொடுப்பதாக இருந்தால், பஞ்சாயத்து யூனியனின் நிதி நிலைமை அனுமதிக்குமா என்று பார்க்கவேண்டும். அதைப் பார்த்து மேலும் இரண்டாயிரத்தி ஐந்நூறு ரூபாய் பஞ்சாயத்து மூலமாகவோ அல்லது பொது மக்கள் மூலமாகவோ பெற முடியுமா என்று பார்க்கவேண்டும். அதையெல்லாம் பார்த்துத் தான் அதற்கு மேல் 12,500 ரூபாய் அதற்கு ஈடாக அரசாங்கம் கொடுத்து வருகிறது.

* 423 *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether orders have been issued for the taking over by the Government of the High Schools that were classified as Board High Schools; and

(*b*) whether the staff working in those schools have been absorbed as Government employees?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) No. The matter is under examination.

Basic trained teachers

* 424 *Q.*—SRI M. S. SELVARAJAN: Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have any proposal to conduct Public Examinations during the months of September for failed Basic Trained Teachers also just as it is conducted for non-basic teachers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

திரு. எம். எஸ். செல்வராஜன்: பரீட்சையில் தேறாதவர்கள் தற்போது அந்த பயிற்சி பள்ளியில் சேர்ந்து படிக்க வசதி இருக்கிறதா? இல்லையென்றால் வசதி செய்து கொடுப்பதைப்பற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

திரு. எம். எஸ். செல்வராஜன்: இப்போது, பரீட்சையில் தேறாத ஆசிரியர்கள் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ஸ்தானத்திலே வேலை செய்வதற்கு ஏதேனும் தடை இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அதைப்பற்றியும் தனிக்கேள்வி வேண்டும்.